# பாடம் 17: நாடுகடத்தல்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், இஸ்ரயேல் அரசு தனது மனித அரசர்களின் தாக்கத்தால் குழப்பத்தில் இருந்தது என்பதை நாம் கற்றோம். சில அரசர்கள் நல்லோராகவும், மற்றவர்கள் தீயோராகவும் ஊழல்வாதிகளாகவும் சிலைகளை வழிபடுவோராகவும் இருந்தனர் இந்த பாடத்தில், அவர்கள் மனந்திருந்த மறுத்ததால் இறுதியாக வெளிநாட்டினர் படையெடுத்து வரவும் இஸ்ரயேலை வெல்லவும் கடவுள் அனுமதித்தார் என்பதைப் பற்றி நாம் கற்போம். ஒடுக்கும் பேரரசுகளால் ஆளப்பட்ட, 700 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த காலம் முழுவதும் நாடுகடத்தலின் காலம் என்று அழைக்கப்படுகிறது.

**தற்போதைய பாடம்:**

1. வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் இஸ்ரயேலர் நுழைந்தப் பிறகு, அவர்கள் நிறைவின்றி ஒரு மண்ணக அரசரை கடவுளிடம் கேட்டனர், ஆகவே கடவுள் அவர்களுக்கு அரசர் சவுலை வழங்கினார். அரசர் சவுல் கடவுளுக்கு கீழ்ப்படியாததால் அவருக்கு பதில் தாவீது அரசரானார். அரசர் தாவீது ஒரு நல்ல அரசராக இருந்தார், ஆனால் அவர் விபச்சாரம், கொலை ஆகியப் பாவங்களைச் செய்தார். அடுத்த அரசராக சாலமோன் இருந்தார். அவர் ஒரு ஞானமுள்ள அரசர். எனினும், அவருக்கு 700 மனைவியரும் 300 வைப்பாட்டியரும் இருந்தனர். அவரது மனைவியர் இஸ்ரயேலுக்குள் சிலைகளைக் கொணர்ந்து அவற்றை வழிபட்டனர். அரசர் சாலமோனின் மகன் ரெகபெயாம் ஒரு தற்பெருமையுள்ள அரசனாக இருந்தான். மக்களுக்குச் செவிமடுக்காமல், அவர்கள் மீது அதிகமாக கட்டாய வரிகளைச் சுமத்தித் துன்புறுத்தினான்.

2. மகிழ்ச்சி இழந்த இஸ்ரயேல் மக்கள் அரசன் ரெகபெயாமுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர், அதனால் இஸ்ரயேல் அரசு இரண்டாகப் பிளவுற்றது. வடக்கு அரசு (பத்து குலங்களுடன்) இஸ்ரயேல் என்றும், தெற்கு அரசு (யூதா, பென்யமின் ஆகிய இரு குலங்களுடன்) யூதா என்றும் அழைக்கப்பட்டன. நெறிகேடும் சிலைவழிபாடும் வடக்கு அரசில் இருந்து தெற்கு அரசுக்குப் பரவின.

3. பிறசமயச் சிலையான மோலெக்கை (அல்லது பாகாலை) வழிபட்டதன் வழியாக மக்கள் தொடர்ந்து கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்தனர், பொன் வேய்ந்த மரத்தாலான கன்றின் இந்தச் சிலையின் மார்பில் குழந்தைகளை நெருப்பில் பலியிடும் சூளை ஒன்று இருந்தது. யூதா அரசன் ஆகாசு தனது மகனை இவ்வாறு பலியிட்டான். தற்போது சமூகமும் நெறிகேடு நிறைந்தாக மாறியிருந்தது. நீதியற்ற வரிகளால் ஏழை மக்கள் ஒடுக்கப்பட்டனர், நீதிபதிகள் தங்களது திறந்த நீதிமன்றங்களில் கையூட்டு பெற்றனர், தொழில்கள் செய்தோர் தரமற்ற அளவைகளைக் கொண்டு தங்களது வாடிக்கையாளர்களை ஏமாற்றினர்.

4. மக்களை எச்சரிக்க கடவுள் இறைவாக்கினர்களை அனுப்பினார். கடவுள் தமது மக்களுக்கு தெளிவான செய்தியை வழங்க அவரே இஸ்ரயேலின் இறைவாக்கினர்களைத் தேர்ந்தெடுத்தார். தம் காலத்து மக்களுக்கு மனந்திருந்தல் மற்றும் மனமாற்றத்திற்கான கடவுளின் அழைப்பை வழங்குவது இறைவாக்கினரின் பணியாக இருந்தது. மக்கள் தங்களின் பிறசமய வழிபாடு மற்றும் சமூக அநீதியைக் கைவிடவில்லை எனில், கடவுள் அவர்களின் நாட்டை அழிப்பார் என இறைவாக்கினர்கள் எச்சரித்தனர். இறைவாக்கினர் ஆமோஸ் அதை ‘‘ஆண்டவரின் நாள்’’ என்று அழைத்தார்.

5. இஸ்ரயேல் மனந்திருந்தாத காரணத்தால், நாடு ஐந்து வெவ்வேறு வெளிநாட்டு (அசீரியர், பாபிலோனியர், பெர்சியர், கிரேக்கர், மற்றும் ரோமானியர்) சக்திகளின் கைகளில், ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்தது. ஒன்றன்பின் ஒன்றாக, இப்போது முதல் ஒடுக்கும் பேரரசுகள் இஸ்ரயேலை ஆட்சி செய்தன. இது நாடுகடத்தலின் (பொருள்: ‘‘வெளியேற்றல்’’) காலமாக அறியப்படுகிறது, அது 700 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.

6. நாடுகடத்தலின் காலம் முழுவதும் கடவுளால் அனுப்பப்பட்ட இறைவாக்கினர்கள், ஒரே கடவுள் வழிபாட்டுக்குத் திரும்புவதன் வழியாகத் தங்களது பாவங்களில் இருந்து மனந்திருந்த இஸ்ரயேல் மக்களை வலியுறுத்தினர். கடவுள் ஒரு நாள் அவர்களை மீட்க ஒரு மீட்பரை அனுப்புவார் என்றும் மக்களுக்கு அவர்கள் வாக்களித்தனர்.

7. அடிப்படையில் நாடுகடத்தல் நிகழ்வு முழுவதுமே, தம்முடனான உடன்படிக்கையை மீறிய இஸ்ரயேலரைத் தண்டிக்க வெளிநாட்டு அரசர்களை கடவுள் பயன்படுத்தினார். நாடுகடத்தலில் இருந்த இஸ்ரயேலர் பிடிவாதமாக மனந்திருந்த மறுத்து தொடர்ந்து பாவத்தில் வீழ்ந்தனர், கடவுள் அவர்களிடம் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்ததால் அவர்களைக் கைவிடவில்லை. கடின இதயத்தோடு அவர்கள் இருந்தாலும், இஸ்ரயேலில் தாவீதின் அரசை மீட்டமைக்க தாவீதின் மகனை கடவுள் எழுப்புவார் என்று காத்திருந்த விசுவாசமுள்ள மக்களும் உண்மையில் இருந்தனர். பக்தியுள்ளோரும் நேர்மையாளர்களும் நாடுகடத்தலின் காலத்தில் வழங்கப்பட்ட எல்லா இறைவாக்குகளையும் நோக்கி, இஸ்ரயேலின் ஆறுதலுக்காக -- தாவீதின் மகனின் வருகை, அவரது வீழ்ந்த அரசின் மீண்டெழலுக்காகக் காத்திருந்தனர்.

8. கடவுள் நம்மோடு நட்புறவு கொள்ள விரும்புகிறார். கடவுளோடு நண்பர்களாக இருத்தல் என்றால் அவரை அன்பு செய்வதும் அவரை மட்டும் வழிபடுதலும் ஆகும். அவரை அறிதல் மற்றும் அவரது விருப்பத்திற்கு ஏற்ப வாழ்தல் எனவும் பொருள்படும். கடவுளின் விருப்பத்திற்கு எதிரான விதங்களில் நாம் வாழும்போது, நாம் அவருடனான நட்புறவைக் காயப்படுத்துகிறோம், அல்லது இன்னும் மோசமாக, நமது நட்புறவு முழுவதையும் முறித்துவிடுகிறோம்.

9. இதன் காரணமாகவே கடவுளின் நண்பர்களாக, நாம் வாழுகின்ற விதம் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். பாவம் நம்மீது சுதந்திரமாகக் கைவைக்கவும், நாம் செய்கின்றத் தெரிவுகளைக் கட்டுப்படுத்தவும் நாம் அனுமதிக்கும் பொழுது, அது கடவுளுடனான நமது நட்புறவைப் பாதிக்கிறது.

10. இஸ்ரயேலின் முக்கியப் பிரச்சனையாகப் பாவம் இருந்தது. அவர்கள் கடவுளுடனான தங்களின் நட்புறவிலும், தங்களது சொந்த அறநெறி வாழ்விலும் சமரசம் செய்து கொண்டனர். அவ்விதமாகவே, நாம் கடவுளுடனான நமது உறவுநிலையை லேசாக எடுத்துக்கொண்டால், நல்ல அறநெறி வாழ்வை வாழாவிட்டால், நாம் பாவத்தில் விழ நேரிடும்.

11. பாவம் வளரக்கூடியது, அதாவது, நாம் அதை நிறுத்தாத பொழுது பெரிதாகிக் கொண்டே இருக்கிறது. அது நம் வாழ்வில் இடம்பெற நாம் அனுமதித்தால், நாம் விரும்புவதை விடக் கூடுதலாக எடுத்துக்கொண்டு, நாம் செலுத்த வேண்டியதைவிட அதிமாகச் செலுத்தச் செய்யும். கடவுளுடனான நமது நட்புறவை லேசாகக் காயப்படுத்தும் சிறியப் பாவமாகத் தொடங்குவது, இறுதியாக அவருடனான நமது நட்புறவை முறிக்கும் ஒன்றாக வளர்கிறது.

12. “குறைந்த தீவிரமுள்ள” பாவங்களான அற்பப் பாவங்கள், நாம் இன்னும் கடவுளை அன்பு செய்தாலும் நமது வலுவின்மையின் விளைவாகத் தோன்றுகின்றன. அற்பப் பாவங்களும் கடவுளுடனான நமது உறவுநிலையைக் காயப்படுத்துகின்றன, ஆனால் அவரிடமிருந்து நம்மை விலகச் செய்வதில்லை (கதிம 1855).

13. சாவானப் பாவங்கள் கடவுளுடனான நமது உறவுநிலையைத் துண்டிப்பதாக இருக்கின்றன. சாவானப் பாவங்கள் இதயத்தின் கடினத்தன்மையில் இருந்து தோன்றுகின்றன (கதிம 1864). அவை நம் இதயங்களில் நாம் கொண்டிருக்கிற அன்பை அழித்து, கடவுளுக்கு மாற்றாக வேறென்றுக்கு முழு விருப்பத்துடன் முன்னுரிமை கொடுப்பதன் வழியாக கடவுளிடம் இருந்து நம்மை விலக்குகிறது (கதிம 1855). சாவானப் பாவங்களை ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக நாம் அனுபவிக்கும் இதயத்தின் மனமாற்றமும் கடவுளின் இரக்கமும் மட்டுமே நலமளிக்க முடியும் (கதிம 1856).

14. அற்பப் பாவங்கள், பழக்கமாக ஏற்கப்பட்டு செய்யப்படும் பொழுது, இறுதியாக சாவானப் பாவங்களுக்கு இட்டுச் செல்கின்றன (கதிம 1863).

15. நாம் சாவானப் பாவம் செய்ததை எப்படி நாம் அறிந்துகொள்ள முடியும்?
அ) பத்துக் கட்டளைகளை மீறும் தீவிரமானத் தவறைச் செய்திருக்க வேண்டும் (கதிம 1858);
ஆ) நாம் செய்வது தவறு என்று நாம் முழுமையாக அறிந்திருக்க வேண்டும் (கதிம 1859);
இ) அத்தவறு செய்ய நாம் முழு விருப்பத்தோடு முடிவெடுத்திருக்க வேண்டும் (கதிம 1859).